2002 ஏப்ரல் 10]

விற்பனைக்கூடம் அமைந்துள்ள காரணத்தினால் மடப்பட்டு கிராமத்தில் அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 118, திரு. ப. நீலகண்டன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

118—

விவசாயக் கல்லூரி

***8728—திரு. ப. நீலகண்டன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதியில் விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ப. நீலகண்டன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் வேலூர் மாவட்டத்திற்கு இந்த ஆண்டில் சுமார் 50 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து குறிப்பாக சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த ஆதிதிராவிட மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுடைய எதிர்காலத்தை, நலனைக் கருதி தாயுள்ளத்தோடு உத்தரவிட்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை அறிவித்ததற்கு ஆற்காடு தொகுதி மக்களின் சார்பிலும், அனைத்துத் தொகுதி மக்களின் (மேசையைத் தட்டும் ஒலி) சார்பிலும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கேட்காமலேயே வாரி வழங்குகிற தெய்வம். வேலூர் மாவட்டத்திற்கு திருவள்ளுவர் பல்கலைக்கழகம் வழங்கி இருக்கிறார்கள். மிகவும் ஏழ்மையான ப்ளஸ்-2 படிக்கும் ஆதிதிராவிட மாணவிகளுக்கு மிதிவண்டி

வழங்கியுள்ளார்கள். அதேபோல ஆற்காடு தொகுதியிலே விவசாயத் தொழில் நிறைந்த மலை சார்ந்த பகுதிகளான வெங்கடாபுரம், குப்பம், புங்கனூர், வெல்லக்குளம், வண்டிக்கல் போன்ற கிராமங்கள் உள்ளன. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பிள்ளையின் தொகுதியில் விவசாயக் கல்லூரி அமைத்துத் தர முடியுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 10 விவசாயக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல வேலூர் மாவட்டம், கலவையில் ஆதிபராசக்தி அறக்கட்டளையின்கீழ் விவசாயக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. ஆகவே அதே மாவட்டத்தில் புதிய கல்லூரி அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், கேள்வி இல்லையா? வியப்பாக இருக்கிறது.

வினா எண் 119, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

119—

ஊட்டச்சத்து

***7177—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவுத் திட்டத்தில் சத்துருண்டையில் பிண்ணாக்கு சேர்ப்பதற்குப் பதிலாக ஊட்டச்சத்துள்ள ஜவ்வரிசியைச் சேர்த்துக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜவ்வரிசியை ஊட்டச்சத்துணவில் சேர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.